**ஜனவரி – 08**

# TNPSC துளிகள்

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் (மார்க்சிஸ்ட்) சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான சு. வெங்கடேசன் என்பவர் 2019 ஆம் ஆண்டின் இயல் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - இந்த விருதானது கனடாவில் உள்ள தமிழ் இலக்கியத் தோட்டக் கழகத்தினால் வழங்கப்படுகின்றது. இது சர்வதேச அளவில் தமிழை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- கென்யாவின் கடற்கரையோர லமு என்னும் பிராந்தியத்தில் அமெரிக்கா மற்றும் கென்யப் படைகளால் பயன்படுத்தப்பட்ட ஒரு இராணுவத் தளத்தை அல் - ஷபாப் தாக்கியுள்ளது.
    - லமு தீவானது யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக விளங்குகின்றது. இது கென்யாவின் கிழக்கில் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது.
- பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமையின் (Corporate Social Responsibility - CSR) வரிசையில், அறிவியல்சார் நிறுவனங்களில் அறிவியல் சமூகப் பொறுப்புடைமை (Scientific Social Responsibility - SSR) குறித்த அறிவிப்பை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் அறிவித்துள்ளார்.
    - இது செயல்படுத்தப்பட்டால், அறிவியல் சமூகப் பொறுப்புடைமை குறித்த தேசியக் கொள்கையை அமல்படுத்திய உலகின் முதலாவது நாடாக இந்தியா உருவெடுக்கும்.

# தேசியச் செய்திகள்

## பெண்கள் அறிவியல் மாநாடு

- பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட இந்திய அறிவியல் மாநாட்டின் (Indian Science Congress - ISC) ஒரு பகுதியாக 9வது மகளிர் அறிவியல் மாநாடானது (Women Science Congress - WSC) ஏற்பாடு செய்யப்பட்டது.
- அறிவியல் சார்ந்த ஆராய்ச்சியில் பாலின வேறுபாடு காணப்படுவதால் பெண்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டியுள்ளது.
- இந்திய அறிவியல் மாநாட்டுச் சங்கமானது இந்தியாவின் முதன்மையான அறிவியல் அமைப்பாகும். இதன் தலைமையகம் மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தாவில் அமைந்துள்ளது.
- இந்த மாநாட்டின் முதலாவது கூட்டமானது 1914 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொல்கத்தாவில் உள்ள ஆசியச் சங்கத்தின் வளாகத்தில் நடைபெற்றது.

## கிரண் திட்டம்

- கிரண் (ஊக்குவிப்பின் மூலம் ஆராய்ச்சி முன்னேற்றத்தில் அறிவின் ஈடுபாடு - (Knowledge Involvement in Research Advancement through Nurturing) என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் பெண்களுக்கான ஒரு பிரத்தியேகத் திட்டமாகும்.

- ❖ இது பாலின நீரோட்டத்தின் மூலம் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் பாலின சமத்துவத்தை கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ பெண் விஞ்ஞானிகள் தங்களது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வேறு முக்கியமான சிக்கல்களைக் கையாளும் வகையில் கிரணின் வெவ்வேறு திட்டங்கள் மற்றும் பல்வேறு கூறுகள் உள்ளன.

## நசீம் அல் பஹர் கடற்படைப் பயிற்சி

- ❖ நசீம் அல் பஹர் என்ற கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பதற்காக ஓமன் நாட்டுக் கப்பல்கள் கோவா வந்துள்ளன.
- ❖ நசீம் அல் பஹர் (கடல் காற்று) என்ற பயிற்சியானது இந்தியக் கடற்படைக்கும் ஓமன் கடற்படைக்கும் இடையிலான ஒரு இருதரப்புக் கடற்படைப் பயிற்சியாகும்.
- ❖ இந்தப் பயிற்சியானது 1993 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகின்றது.
- ❖ இந்தியாவிற்கும் ஓமனுக்கும் இடையிலான பிற பயிற்சிகள் பின்வருமாறு:
    - ○ அல் நஜாஹ் பயிற்சி: இது இந்தியாவிற்கும் ஓமனுக்கும் இடையில் நடத்தப்பட்டு வரும் ஒரு இராணுவப் பயிற்சியாகும்.
    - ○ ஈஸ்டர்ன் பிரிட்ஜ் பயிற்சி: இது இந்தியாவுக்கும் ஓமனுக்கும் இடையில் நடத்தப்பட்டு வரும் ஒரு விமானப்படைப் பயிற்சியாகும்.




## இந்தியாவில் சர்க்கரையை உட்கொள்ளல் குறித்த ICMRன் அறிக்கை

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமானது (Indian Council of Medical Research - ICMR) இந்தியாவில் சர்க்கரையை உட்கொள்ளல் குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ ICMR, ஹைதராபாத்தில் உள்ள NIN நிறுவனம் (தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் - National Institute of Nutrition) மற்றும் ILSI (இந்திய சர்வதேச வாழ்க்கை அறிவியல் நிறுவனம் - International Life Science Institute of India) ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ நாட்டில் நடத்தப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது ஆய்வு இதுவாகும்.
- ❖ பெண்களால் ஒரு நாளைக்கு உட்கொள்ளப்படும் சர்க்கரையின் அளவானது 20.2 கிராம் என்றும் ஆண்களால் ஒரு நாளைக்கு உட்கொள்ளப்படும் சர்க்கரையின் அளவானது 18.7 கிராம் என்றும் இந்த அறிக்கை கூறியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஈரான் அணுசக்தி ஒப்பந்தம்

- ஈரான் நாடானது JCPOA (விரிவான கூட்டு செயல் திட்டம் - Joint Comprehensive Plan of Action) அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து முற்றிலுமாக விலகியுள்ளது.
- அமெரிக்கத் துருப்புகள் அந்நாட்டுத் படைத் தலைவரான காசிம் சுலைமானியைக் கொன்ற பின்னர் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.
- ஈரான் மற்றும் பி5, ஜெர்மனி & ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிற்கு இடையே 2015 ஆம் ஆண்டில் விரிவான கூட்டு செயல் திட்டம் என அழைக்கப்படும் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
- பி5 என்பது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் (அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் இங்கிலாந்து) ஆகும்.
- இந்த ஒப்பந்தமானது ஈரானின் அணுசக்தி திட்டத்தை தடை செய்கின்றது. அதற்குப் பதிலாக அந்நாட்டிற்கு எதிரான பெரும்பாலான பொருளாதார தடைகள் நீக்கப்பட்டுள்ளது.

### *இந்தியாவின் மீதான தாக்கங்கள்*

- தற்போது இந்தியாவின் மூன்றாவது பெரிய எண்ணெய் வள ஏற்றுமதியாளர் நாடாக (ஈராக் மற்றும் சவுதி அரேபியாவுக்குப் பிறகு) ஈரான் விளங்குகின்றது. மேலும் எண்ணெய் விலைகளில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டால் இந்தியாவில் பணவீக்க அளவையும் இந்திய ரூபாயையும் அது பாதிக்கும்.
- இது சாபஹார் துறைமுகத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## NSE அறிவு மையம்

- மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் NSE அறிவு மையத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது ஒரு செயற்கை நுண்ணறிவின் மூலம் (Artificial Intelligence - AI) செயல்படுத்தப்படும் கற்றல் சூழல் அமைப்பாகும்.
- இந்தத் தளமானது தேசிய பங்குச் சந்தையினால் முழுவதும் நிர்வகிக்கப்படும் (National Stock Exchange - NSE) கிளை நிறுவனமான NSE நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தளமானது வங்கியல், நிதியியால், பத்திரங்கள் மற்றும் காப்பீட்டுத் துறைகளில் பணியாற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கான திறன்களை மேம்படுத்துவதில் உதவ முற்படுகின்றது.

### *NSE பற்றி*

- NSE என்பது மும்பையில் அமைந்துள்ள இந்தியாவின் முன்னணிப் பங்குச் சந்தையாகும்.
- NSE ஆனது 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உலகளாவிய பழப்பூச்சி (டிரோசோபிலா) மாநாடு - புனே

- ஆசியப் பசிபிக் பழப்பூச்சி (டிரோசோபிலா) ஆராய்ச்சி மாநாட்டின் ஐந்தாவது

பதிப்பானது புனேவில் தொடங்கியது.

- இது இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் முதன்முறையாக இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாடானது ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெறும்.

*பழப்பூச்சி (டிரோசோபிலா)*

- இது ஒரு சிறிய பழ ஈ ஆகும். இது டிரோசோ - பிலிடே குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும்.
- இது ஆராய்ச்சிகளில் ஒரு மாதிரி உயிரினமாகப் பயன்படுத்தப்படுகின்றது.
- இதன் மரபணு முற்றிலும் வரிசைப்படுத்தப் பட்டுள்ளது. இதன் உயிரி வேதியியல், உடலியல் மற்றும் நடத்தை பற்றி ஏராளமான தகவல்கள் கிடைக்கின்றன.




# மாநிலச் செய்திகள்

## வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்குதல் – ஆந்திரப் பிரதேச மாநில அரசு

- ஒரு சோதனை முறையிலான திட்டமாக, ஆந்திரப் பிரதேச மாநிலமானது வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்குதல் குறித்த ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.
- இது ஆந்திரப் பிரதேச மாநில அரசின் கனிம மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்த நடவடிக்கையானது மணல் பற்றாக்குறை மற்றும் மணல் கடத்தல் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க உதவ இருக்கின்றது.
- சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957 ஆனது சட்டவிரோதமாக மணல் அள்ளுவதைத் தடுப்பதற்கான விதிகளை வழங்குகின்றது.

## மியாவாகி காடு வளர்ப்பு முறை

- மியாவாகி காடு வளர்ப்பு முறையானது கேரளாவில் உள்ள அரசு அலுவலக வளாகங்கள், குடியிருப்பு வளாகங்கள், பள்ளி வளாகங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- மியாவாகி முறை சிறிய பகுதிகளில் மரக்கன்றுகளை நடவு செய்வதோடு வளங்களுக்காக "போராட" வழிவகுக்கின்றது. இந்த முறையில் மரங்கள் கிட்டத்தட்ட 10 மடங்கு விரைவாக வளரும்.
- இந்த முறையானது ஜப்பானில் தோன்றியது. இப்போது சென்னை உட்பட உலகின் பிற பகுதிகளிலும் அதிக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
- கொல்லைப்புறப் பகுதிகளை சிறிய வகைக் காடுகளாக மாற்றுவதன் மூலம் நகர்ப்புற

காடுகள் உருவாக்கம் என்ற கருத்தை இது எடுத்துக் காட்டுகின்றது.

## மகாராஷ்டிரா - பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா

- மகாராஷ்டிரா மாநிலமானது தனது நிலப் பதிவுகளை பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனாவின் (Pradhan Mantri Fasal Bima Yojana - PMFBY) இணைய தளத்துடன் ஒருங்கிணைத்த நாட்டின் முதலாவது மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- நிலப் பதிவுகளை PMFBY உடன் ஒருங்கிணைக்கும் திட்டத்தில் நிலப் பதிவு விவரங்கள் ஆன்லைனில் கிடைப்பதால் நேரத்தை மிச்சப்படுத்தவும் கோப்புகளைப் பிற்சேர்க்கவும் உதவுகின்றது.

### *PMFBY பற்றி*

- PMFBY என்பது பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இத்திட்டமானது மத்திய வேளாண் மற்றும் விவசாயி நல அமைச்சகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது.
- இந்தத் திட்டத்தின் மூலம் காரீப் பயிர்களுக்கு 2% காப்பீட்டுத் தொகையும் ராபி பயிர்களுக்கு 1.5% காப்பீட்டுத் தொகையும் விவசாயிகளால் செலுத்தப்படுகின்றது.
- விவசாயிகளால் செலுத்தப்படும் வருடாந்திர வணிக மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான காப்பீட்டுத் தொகையானது 5% ஆக இருக்கும்.

# இதரச் செய்திகள்

## இடப்பெயர்விற்கான ஆண்டு – 2020

- மத்திய தொழில் பாதுகாப்பு படையானது (Central Industrial Security Force - CISF) படை வீரர்களின் நலனுக்காக 2020 ஆம் ஆண்டை “இடப்பெயர்விற்கான ஆண்டாகக்” கடைபிடிக்கின்றது.
- இது குடியிருப்புப் பிரிவுகளை நிர்மாணித்தல் மற்றும் வீரர்களின் நலன்புரி நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்த இருக்கின்றது.

### *CISF*

- ஆரம்பத்தில் CISF படைப் பிரிவானது CISF சட்டம், 1968ன் கீழ் நிறுவப்பட்டது.
- இது 1983 ஆம் ஆண்டில் சட்டத் திருத்தத்தின் கீழ் ஆயுதப் படையாக மாற்றப்பட்டது.
- இது உலகின் மிகப்பெரிய பாதுகாப்பு அமைப்பாகும்.
- இந்தப் படையானது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## பிபி கா மக்பாரா - பாதுகாப்பு

- மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில் அமைந்துள்ள பிபி கா மக்பராவின் அறிவியல்பூர்வ பாதுகாப்பை இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனம் (Archaeological Survey of India - ASI) வழங்க இருக்கின்றது.
- 1660 ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசரான ஔரங்கசீப் தனது மனைவியான தில்ராஸ் பானு பேகமின் நினைவாக மக்பராவை உருவாக்கினார்.
- இந்த அமைப்பானது தாஜ்மஹாலுடன் ஒத்திருப்பதால் ‘தக்காணத்தின் தாஜ்’ என்று

அழைக்கப்படுகின்றது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★